சலுகைகளும் இல்லாமல் இருக்கிறது. அவர்கள் கொஞ்சம் பேர்தான் இருக்கிறார்கள். தமிழ் நாட்டிலே அவர்களைவிட ஊழிய காலம் குறைவாக இருப்பவர்கள் அவர்களைவிட அதிகமாகச் சம்பளம் வாங்குகிறார்கள். எனவே கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு அதைக் கொண்டுவருகிறேன். இடையிலே பிரிந்து சென்றுவிட்டுத் திரும்பிவந்திருப்பதன் காரணமாக அதிகமான ஊழிய காலம் இருந்தும், சம்பளம் குறைவாக இருக்கிறது. இதை அரசு கருணையோடு பரிசீலித்து நியாயம் வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, முதலிலேயே நான் தெளிவாகச் சொன்னேன். 1—11—58 வரைதான் திருத்தியமைக்கப்பட்டுவிட்டது. அதற்குப் பிறகு 1—11—58 முதல் 31—5—60 வரைக்கான பணிக்காலத்திற்கு மட்டும் வெயிடேஜ் அளிக்கப்பட்டது. அந்த பிரச்சினை மீண்டும் மீண்டும் பரிசீலிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டது. இப்பொழுது ஊதியமாற்றம் செய்வதற்குப் பரிசீலனை இல்லை.

Liberalised Pension Benefits to the Personnel belonging to 'B' Wing

* 243 *Q.*—THIRU S. MUTHUSWAMY (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Government (Board) High School Head Masters' Special Conference held in Madras during September, 1973, has requested the grant of liberalised pension benefits to all personnel belonging to 'B' Wing, who retired between 1-4-66 and 1-4-70; and

(*b*) if so, the action proposed to be taken by the Government in the matter?

'பி' பிரிவு பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியர்கள் அனைவருக்கும் தாராளமாக்கப்பட்ட ஓய்வூதியம்

திரு. செ. முத்துசாமி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) 1—4—1966-க்கும், 1—4—1970-க்கும் இடைப்பட்ட கால அளவில் பதவி ஓய்வு பெற்ற 'பி' பிரிவு பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியர்கள் அனைவருக்கும் தாராளமாக்கப்பட்ட ஓய்வூதியம் அளிக்கப்பட வேண்டுமென 1973

செப்டம்பர் திங்களில் சென்னையில் நடைபெற்ற, தமிழ் நாடு அரசு உயர்நிலைப் பள்ளி (கழக) தலைமை ஆசிரியர்களின் சிறப்பு மாநாட்டில், கேட்கப்பட்டுள்ளதென்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அரசு ஆணை எண் 399, கல்வி, நாள் 21—3—72-ல் முன்னாள், கழக உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரிந்த ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத ஊழியர்களை 1—4—1070 முதற்கொண்டுதான் அரசுப் பணியில் எடுத்துக் கொள்ளப் பட்டது என்றும், 1—4—1966 முதல் எடுத்துக்கொள்ள இயலாது என்றும் ஏற்கனவே ஆணையிடப்பட்டுள்ளது.

Resolutions passed by the Madras City Specialist Teachers Association.

* 244 *Q.*—PULAVAR O. ARIVUDAI NAMBI (ON BEHALF OF THIRU K. ARIVAZHAGAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the resolutions passed by the Madras City Specialist Teachers Association on 20th October 1973 have been brought to the notice of the Government ; and

(*b*) if so, the action taken thereon ?

சென்னை மாநகர் சிறப்பாசிரியர் கழகத்தின் தீர்மானங்கள்

புலவர் ஓ. அறிவுடைநம்பி (திரு. க. அறிவழகன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 20—10—1973 அன்று நடைபெற்ற சென்னை மாநகர் சிறப்பாசிரியர் கழகத்தின் தீர்மானங்கள் அரசின் கவனத்திற்கு வந்துள்ளனவா ?

(இ) ஆமெனில், அவற்றின்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தீர்மானங்களின் நகல் ஒன்று பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் பெறப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS